92. *அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து*
*இன்சொலன் ஆகப் பெறின்*

**அகம் மலர்ந்து தானம் கொடுப்பதை விட**
**முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது**
**முத்திரை பதிக்கும் முத்தானப் பண்பாகும் !**

93. *முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்*
*இன்சொ லினதே அறம்*

**மலரும் முகத்தோடு இனிமையாகப் பார்த்து**
**மனப்பூர்வமாக இனிய சொற்களை அகம்**
**மலரக் கூறுவதே வாழ்க்கை நெறியான அறம் !**

228. *ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்*

**பொருளைத் தேடித்தேடி சேர்ந்துப் பின்**
**பொருள் முழுவதும் கொடியோரால் இழந்தவர்**
**பிறருக்கு கொடுத்து உதவுவதால்**
**பிறக்கும் இன்பத்தை அறிய மாட்டார் !**

394. *உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்*

**பழகும் போது மிக மகிழ்வோடு பழகி, பழகிய நினைவுகள்**
**பசுமையாக என்றும் நினைவில் நின்று**
**பிரியும் போது வருத்தமுடன்**
**பிரியா விடை பெறுவது அறிஞர் செயல் !**

707. *முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்*

**முழு மனதையும் அறியக் கூடிய அங்கம்**
**முகத்தைத் தவிர வேறு உண்டா ?**
**முகமே மனதில் உள்ள விருப்பையும்**
**முன்னிடும் வெறுப்பையும் வெளிப்படுத்த**
**முந்திக் கொண்டு வரும் அறிவாளி !**

*783.* *நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு*

**படிக்கப் படிக்க இன்பம் தருவது**
**படிப்பறையில் வீற்றிருக்கும் நூலின் சிறப்பு !**
**பழகப் பழக இன்பம் தருவது**
**பண்புடையாளர்களின் நட்பு !**

*999.* *நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்*
*பகலும்பாற் பட்டன் றிருள்*

**யாரோடும் சிரித்துப் பழகி மகிழாதவர்களுக்கு**
**யாங்கனும் இவ்வுலகம் எப்போதும்**
**ஒளி உள்ள பகலிலும்**
**ஒளியற்ற இருளாகவே இருக்கும் !**

*1201.* *உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்*
*கள்ளினும் காமம் இனிது*

**உள்ளத்தில் எண்ணும் போதெல்லாம்**
**உள்ளுக்குள் தீராத பெரு மகிழ்ச்சியை**
**உண்டாக்குவதால் என்றென்றும்**
**உண்டால் களிப்புத் தரும் கள்ளை விட**
**உண்மையாகவே காதல் இனிது !**